
ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 5 இதழ் : 1 நவம்பர் 2008



**பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்.** –இயேசு

யோவான் 20:21

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதலை தெரிவிக்கிறேன். இந்த நவம்பர் மாத செய்தி மலர் மூலமாக உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் !

கடந்த பத்து மாதங்கள் முழுவதிலும் தேவன் பணித்தளத்தில் எங்களோடு இருந்து எங்களை வழிநடத்தி வந்தார். குறிப்பாக பணித்தளங்களை பார்வையிட வந்த தேவ ஊழியர் சகோ. K.N. ராஜன் அவர்களை ஊழியர்கள் கூட்டங்களிலும், மூப்பர்கள் கூட்டங்களிலும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். கடந்த மாதத்தில் நடைபெற்ற வாலிபர்களுக்கான முகாம்கள் மற்றும் மூப்பர்களுக்கான முகாம்களை தேவன் அதிகமாக ஆசீர்வதித்து பரிசுத்த ஆவியானவர் பங்குபெற்ற ஒவ்வொருவரையும் நிரப்பினார். செப்டம்பர் 26ஆம் தேதி நடைபெற்ற ஷாலோம் அற்புதத்தின் நாளன்று தேவன் அநேக அற்புதங்களை செய்தார்.

மேலும் அநேக தேவ பிள்ளைகளின் ஜெபங்கள் மற்றும் பொருளுதவியின் மூலமாக குஜராத், தாகோத் மிஷனெரி இல்ல கட்டிடம் வாங்கி பதிவு செய்ய தேவன் உதவி செய்தார். வருகிற நவம்பர் மாதம் 4 முதல் 7–ம் தேதி வரை சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மூலமாக குஜராத்தில் உள்ள மெம்தாபாத்தில் நடைபெற உள்ள சுதேச ஊழியர்கள் குடும்ப முகாமிற்காக பாரத்தோடு ஜெபியுங்கள். இந்த கூட்டத்திற்கான நிதியுதவி கிடைக்கப்பெறவும் ஊழியர்கள் இரட்டிப்பான அபிஷேகத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளவும், பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

உங்களுக்காக நாங்கள் பாரத்தோடு அனுதினமும் தேவசமுகத்தில் ஜெபித்து வருகிறோம்.

*மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைப்பெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைப்பெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 54:10*

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*

*(வே. தேவதாஸ்)*

# அனுப்புகிற திரியேக ஆண்டவர்

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

நம்முடைய திரியேக தேவன் அனுப்புகிற தேவனாக இருக்கிறார். **ரோமர் 10–ம் அதிகாரம் 13 முதல் 16 வரை** வாசித்துப் பார்க்கும்போது முதலாவது நற்செய்தியைக் கேள்விப்படாதவர்கள். இரண்டாவது நற்செய்தியை அறிவிக்கிறவர்கள். மூன்றாவது அனுப்புகிறவர்கள். **"அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்"** என்ற வசனத்தின்படி ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகும்படி இந்நாட்களில் அனைத்து சபைகளிலும் அனுப்பப்படவேண்டும் என்கிற ஆத்துமபாரத்தை ஆவியானவர் கொடுத்து வருகிறார். ஆம் ஒவ்வொரு கிறிஸ்தவ திருச்சபையும் நற்செய்தியை அறிவிக்கிற பணியாளர்களை நிச்சயமாக அனுப்ப வேண்டும். வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது நாம் ஆராதிக்கிற திரியேக தேவன் அனுப்புகிற தேவனாகவேக் காணப்படுகிறார்.

## 1. அனுப்புகிற பிதாவாகிய தேவன்:

ஆதியாகமம் 11–ம் அதிகாரத்தில் பாபேல் கோபுரத்தின் நிமித்தமாக உலகம் முழுவதும் பாஷைகள் தாறுமாறாக்கப்பட்டு சாபத்தினால் ஆசீர்வாதத்தை இழந்துபோவதை பார்க்கிறோம். ஆனால் பிதாவாகிய தேவன் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் சாபங்கள் நீங்கி ஆசீர்வதிக்கப்பட ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு பிரித்து எடுத்து நான் உன்னை அனுப்பும் தேசத்திற்குப் புறப்பட்டுப் போ என்று அனுப்புகிறார். **"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ". (ஆதி 12 : 1 )** ஆபிரகாமின் சந்ததியாக 70 பேர் ஆசீர்வதிக்கப்பட்டு பலுகிப் பெருகவும் போதிக்கப்படவும் தேவன் யோசேப்பை எகிப்திற்கு அனுப்பினார். **"பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாம–ருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்". (ஆதி 45 : 7)**

இஸ்ரவேல் ஜனங்கள் பலுகிப் பெருகி எகிப்து தேசத்தில் வாழும்போது பார்வோன் அரசனால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள்; நெருக்கப்பட்டார்கள், ஒடுக்கப்பட்டார்கள், 200 வருடங்கள் அடிமைத்தனத்தில் வேதனைப்பட்டார்கள். அவர்கள் கூக்குரல் தேவசந்நிதியை எட்டிற்று. காலம் நிறைவேறினபோது தன்நம்பிக்கையற்றுப் போன மோசேயைப் பார்த்து உன்னை அனுப்புவேன் என்று கூறினார். **"நீ இஸ்ரவே– புத்திரராகிய என் ஜனத்தை எகிப்தி–ருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்". யாத் (3:10)** அப்படியாகவே பிதாவாகிய தேவன் தம் சொந்த ஜனமாகிய இஸ்ரவேல் ஜனத்தாரை பார்வோன் அடிமைத்தனத்தி–ருந்து மீட்க தம் தாசனாகிய மோசேயை அனுப்பினார்.

இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்ற தேவன் மோசே, யோசுவா காலத்திற்குப் பின்பாக அவர்களை நியாயம் விசாரிக்க, சத்துருவின் கையி–ருந்து மீட்க நியாதிபதிகளை அனுப்பினார். **“அதற்கு கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன். ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்”. (நியா 6 : 16)** கர்த்தர் கிதியோனை தேவ ஜனங்களை மீட்க, நியாயம் விசாரிக்க பிதாவாகிய தேவன் அனுப்பினார்.

பிதாவாகிய தேவன் ராஜாக்களை இஸ்ரவேல், யூதா தேசங்களை ஆண்டபோது தம்முடைய வழியையும், நீதியையும் அறிவிக்கவும் தேசமும், தேவ ஜனங்களும் தேவனை தேடும்படியாகவும், தேவசித்தம் நிறைவேற்றப்படவும், தீர்க்கதரிசிகளை அனுப்பிக்கொண்டேயிருந்தார். சவுல் ராஜா காலத்தில் சாமுவேலையும், தாவீது அரசன் காலத்தில் நாத்தான், காத் போன்ற பல தீர்க்கதரிசிகளையும் எ–யா, எ–சாக்களையும் தொடர்ந்து ஏசாயா முதற்கொண்டு சகரியா தீர்க்கதரிசி வரை பின்பு தேவன்அனுப்பிக்கொண்டேயிருந்தார். **“ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை–யெல்லாம் நீ பேசுவாயாக”. (எரேமியா 1 : 7)** வசனத்தின்படி எரேமியாவை தன் வார்த்தையினால் பெலப்படுத்தி அனுப்பினார். பிதாவாகிய தேவனுடைய இதயத்தின் பாரத்தை **“பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்”. (ஏசாயா 6 : 8)** வாசிக்கிறோம். இறுதியாக பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை **“காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்”. (கலா 4:5)** இயேசுவே அனுப்பினார். நாம் ஆராதிக்கிற பிதாவாகிய தேவன் அனுப்புகிற தேவனாகயிருக்கிறார்.

## 2. அனுப்புகிற குமாரனாகிய இயேசு கிறிஸ்து:

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் தாம் பிதாவினால் அனுப்பப்பட்ட காரியத்தை மறவாமல் அவர் அனுப்பப்பட்ட சித்தத்தை நிறைவேற்றினார். **இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4 : 34).** இயேசு கிறிஸ்துவும் தம்முடைய 331/2 வருட ஊழியக்காலத்தில் 12 சீஷர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பினார் என்று வாசிக்கிறோம். **சாயங்காலமாகிறபோது, பன்னிருவரும் சேர்ந்துவந்து, அவரை நோக்கி: நாம் இருக்கிற இடம் வனாந்தரமாயிருக்கிறது, சுற்றியிருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய்த் தங்கி, போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக்கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும். (லூக்கா 9 : 12)** மறுபடியும் லூக்கா 10–ம்

அதிகாரத்தை வாசிக்கும்போது அறுவடை மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்று அறிந்து மறுபடியும் 70 பேர்களை குமாரனாகிய இயேசு கிறிஸ்து கிராமங்கள்தோறும், பட்டிணங்கள்தோறும் அனுப்பினார். **இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம்போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். (லூக்கா 10 : 1)** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரத்திற்கு ஏறும்பொழுது தம்முடைய இரண்டாம் வருகைக்கு முன்பாக ஜனங்களை ஆயத்தப்படுத்தி சுவிசேஷத்தை அறிவிக்க, சீஷர்களுக்குக் கட்டளையிட்டு புறப்பட்டுச் செல்லுங்கள் என்று நம்மை அனுப்புகிறார். (மத்தேயு 28: 18–20) இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது **"நீர் என்னை உலகததில் அனுப்பினதுபோல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்"** (யோவான் 7:18) நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அனுப்புகிற ஆண்டவராய் இருக்கிறார்.

**3. அனுப்புகிற பரிசுத்த ஆவியாகிய தேவன்**

அப்போஸ்தல நடபடிகளை வாசிக்கும்பொழுது 28 அதிகாரங்களிலும் பரிசுத்த ஆவியானவர் நற்செய்தி அறிவிக்கும்படியாக அப்போஸ்தலர்களை மட்டுமல்ல. மூப்பர்களையும், விசுவாசிகளையும் தேவையுள்ள மனிதர்கள் மத்தியிலும், தேவையுள்ள கிராமங்களிலும் பட்டிணங்களிலும் அனுப்பி பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார் என்று காண்கிறோம். எருசலேமில் மட்டுமல்ல யூதேயாவிலும், அண்டை நாடாகிய சமாரியாவிலும் பேதுருவை அனுப்பி புறஜாதிகளுக்கு நற்செய்தியை அறிவிக்கும்படிச் செய்தார்.

அந்தியோகியா சபையார் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கும்போது பர்ணபாவையும், சவுலையும் அழைத்து ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். **அப்பொழுது தன் தாயின் வயிற்றி–ருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டுவந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். (அப் 13 : 2)** பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாக பல தேசங்களில் சபைகளை உருவாக்கினார். முதல் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவர் தோமாவை பாரத தேசத்திற்கு அனுப்பி வைத்தார். அதைத்தொடர்ந்து ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் தலைமுறை தலைமுறையாக பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு தேசங்களுக்கும் தமது நற்செய்தி தொண்டர்களை அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்.

நம்முடைய பாரத தேசத்தில் தேவன் பதினேழாம் நூற்றாண்டில் முதல் பிராட்டஸ்டாண்ட் மிஷனெரியாக சீகன்பால் மிஷனெரியை தரங்கம்பாடிக்கு அனுப்பினார். அதைத்தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக நமது தென்தமிழ் நாட்டில் கால்டுவெல், போப், ராக்லெண்ட், ஜான்தாமஸ், ரேனியஸ், ரிங்கல்தொபே போன்ற பல நூறு மிஷனெரிமார்களை அனுப்பினார். இன்றைக்கு

தேவன் நம்மை தேவ ஜனங்களாக மாற்றி ஆசீர்வதித்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய திருச்சபைகளில் முற்பிதாக்கள் மூலமாக IMS, NMS, ஸ்தாபனங்களை எழுப்பினார். அநேக மிஷனெரிகளை சபைகளி–ருந்து ஆவியானவர் அறிவிக்கப்படாத மாநிலங்களுக்கு அனுப்பிவைத்தார். அதனைத் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவர் துரிதமாக வல்லமையாக இன்னும் FMPB, Vishwavani, Gems, IEM, BYM, ... போன்ற பல இயக்கங்களை இயக்கி தேசமெங்கும் பல ஆயிரம் மிஷனெரிகளை அனுப்பிக்கொண்டு இருக்கிறார்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக இந்த உலகத்தில் அன்பும், சமாதானமும் கிடைக்காமல் கர்த்தரைவிட்டு தூரமாய் வாழ்ந்த என்னை (சகோ. வே. தேவதாஸ்) இரட்சித்து பரிசுத்த ஆவியானவர் ஆலய ஆராதனை வேளையில் தேவதாஸ் என்று பெயர்சொல்– அழைத்து உன்னை இந்த தேசத்தில் ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவேன் என்று திருவுளம்பற்றி நம் தேசத்தில் வடஇந்தியாவில் வாழும் பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் எங்களை குடும்பமாக அனுப்பினார். எங்களை அனுப்பின பரிசுத்த ஆவியானவர் கடந்த 17 ஆண்டுகளில் மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட்டு வருகிறார். நாம் ஆராதிக்கிற பரிசுத்த ஆவியானவராகிய தேவன் அனுப்புகிற தேவனாக இருக்கிறார்.

இதை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நாம் ஆராதிக்கிற திரியேக தேவன் இன்றும் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையின் நற்செய்தியை அறியாத இடங்களுக்கும் தேவ ஜனங்களுக்கும் “யாரை நான் அனுப்புவேன்” என்று ஆத்தும பாரத்துடன் திரியேக தேவன் உங்களை அழைக்கிறார். அப்படிபோகும்படியாக அழைப்பு பெற்றவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் இவர்களை ஜெபத்தாலும், பொருளுதவியினாலும் தாங்கி, குடும்பமாக, குழுவாக, சபையாக அனுப்புவோம், செயல்படுவோம் என்று நம்மை ஒப்புக்கொடுப்போம். தேசம் தேவனை அறியும்.

**சிந்தனைக்கு : அனுப்புவதில் காலதாமதம் வேண்டாம்.**

லூக்கா 16–ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ஒரு ஐசுவரியவானைப்பற்றி (அவன் பெயரைக் கூட எழுத தேவனுக்கு விருப்பமில்லை) கூறும்போது உலகத்தில் வாழும் போது எத்தனையோ பேர்களை அனுப்பி, உதவி செய்து தேவராஜ்யத்தைக் கட்டலாம். ஆனால் மரித்தப்பின்பு ஆபிரகாமைப் பார்த்து “எனக்கு இன்னும் 5 சகோதரர்கள் இருக்கிறார்கள். லாசருவை அனுப்பும், யாரையாவது அனுப்பும்” என நரகத்தி–ருந்து புலம்பினான். அனுப்பும்படியாக, தாங்கும்படியாக, தேவராஜ்யம் கட்டும்படியாக இவ்வுலகத்தில் தேவன் தருணங்களைத் தருகிறார். இப்பொழுதே ஊழியர்களை அனுப்புவோம்! ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புவோம். ஆலயங்களை, பள்ளிகளை கட்டுவதற்குப் காணிக்கைகளை அனுப்புவோம். ஒருவேளை நாம் இதைச் செய்யாவிட்டால் நரகத்தில் அல்ல! தேவனுடைய ராஜ்யத்திற்கு சென்றபின்பு கூட வேதனைப்படலாம். **“பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்”.** – இயேசு!

*பீல் சுதேச ஊழியர்களுக்கும்,*
*சிறு பிள்ளைகளுக்கும்*

# கிறிஸ்துமஸ் வெகுமதி

அன்பார்ந்த ஷாலோம் ஊழிய ஆதரவாளர்களே!

ஷாலோம் மிஷனெரி பணியில் தேவன் உங்களையும் இணைத்து பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன் படுத்தி வருகிறபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் மனமகிழ்ச்சியின் நாட்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுப்பது வழக்கம். மேலும் நம்முடைய பள்ளி, விடுதியில் படித்து வரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும் ஏதாவது உதவி செய்து வருகிறோம். அதன்படி இந்த ஆண்டும் நம் பீல் சுதேச ஊழியர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள், வெகுமதிகள் கொடுக்கலாம் என ஜெபித்து தீர்மானித்துள்ளோம்.

ஆகவே வருகிற மாதத்தில் நமக்கு இதற்காக நிதி உதவி சுமார் ரூ. 7 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு ரூ. 1000/– அல்லது ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு ரூ. 200/– கிறிஸ்துமஸ் வெகுமதிக்காக கொடுத்து உதவ மிக அன்பாய்க் கேட்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை **நவம்பர் மாதத்திற்குள்ளேயே** அனுப்பினால் இந்த மக்களுக்கு மிகவும் துரிதமாக வெகுமதிகளைக் கொடுக்க உதவியாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் வெகுமதியை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுங்கள். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*May God Bless You*

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. சாம்ஜி மேடா** **ஜெரிகோட் (குஜராத்)**

அன்னைபேன் என்ற சகோதரி சமைப்பதற்காக மரக் கட்டைகளை எடுத்துக் கொண்டிருந்தபோது கா–ல் பாம்பு 4 முறை கடித்து விட்டது. உடனே அந்த இடத்திலேயே மயங்கி விட்டாள். அவளை அழைத்துக் கொண்டு என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். நான் அந்த சகோதரிக்காக ஒன்றரை மணி நேரமாக போராடி ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு விஷத்தை தண்ணீராக மாற்றி ஜீவனைப் பாதுகாத்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. சாகன் H. காமல்** **வன்காட் (குஜராத்)**

வான்காட் கிராமத்தைச் சேர்ந்த கிராபாய் என்ற சகோதரனுக்கு அசுத்த ஆவி பிடித்திருந்ததால் 2 வருடமாக சங்கி–யால் கட்டி வைத்திருந்தார்கள். அந்த சகோதரனை சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். நாங்கள் அனைவரும் இணைந்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார். அதன் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. தேவனுக்கே நன்றி.

**சகோ. கால்சிங் குண்டியா** **அன்டர் (குஜராத்)**

கிட்டீஸ்பாய் என்ற சகோதரனின் வயிற்றில் வெண் குஷ்டம் இருந்தது. அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சகோதரன் ஆலயத்திற்கு வந்து அழுது சுகம் கிடைத்தால் சாட்சி கூறுவேன் என்று பொருத்தனை பண்ணி ஜெபித்தார். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக சுகப்படுத்தினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோ. மங்கு புரியா** **பட்டன்பூர் (குஜராத்)**

சுமி–பேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி 8 வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. இதனால் மிகவும் வேதனையால் மனமுடைந்த சூழ்நிலையில் இருந்தாள். அந்த சகோதரியின் தங்கை பாட்–பேன் நம்முடைய சபைக்கு அவளை அழைத்து வந்தாள். நான் அவளுக்கு இயேசுவைப் பற்றிக் கூறி விசுவாசத்துடன் ஜெபித்தேன். கர்த்தர் கேட்டு அற்புதமாக கடந்த மாதத்தில் ஒரு அழகான ஆண் குழந்தையைக் கொடுத்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாகவதாக.

**சகோ. பத்தியா கராசியா** **கும்புரா (இராஜஸ்தான்)**

காதுபாய் என்ற சகோதரனுக்கு வியாதியினிமித்தம் கை, கால்கள் செய–ழந்து விட்டது. நாங்கள் அந்த சகோதரனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்து கை, கால்கள் செயல்படும்படி கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. ஹர்த்திங் மேடா** **பார்தியா (இராஜஸ்தான்)**

பாருபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியில் சிக்கி இருந்தாள். இதனால் வயிற்றிலும், இடுப்பிலும் அதிகமாக வ– ஏற்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அநேக மந்திரங்கள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. அந்த சகோதரிக்காக சபையில் நாங்கள் பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் கேட்டு அற்புதமாக விடுதலைக் கொடுத்தார். இப்போது ஆண்டவரை ஏற்றுக் கொண்டு விசுவாசியாக உள்ளாள். தேவனுக்கே மகிமை.

**சகோ. ஹிராலால் H. கட்டாரா** **கோய்க்கா (இராஜஸ்தான்)**

சோமிபேன் என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. அநேக மருந்துகள் சாப்பிட்டும்

சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக நம்முடைய சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு வந்து விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக கட்டி மறையும்படி கிருபை செய்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. சுக்லால் M. டாமோர் காரியா (இராஜஸ்தான்)**

புராபாய் என்ற சகோதரரின் மகன் பைத்தியமாகிவிட்டான். மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. சாப்பாடு சாப்பிடாமல் மிகவும் மெ–ந்து போனான். அதற்கு முன்பு என் மகனுக்கு வாய் பேச முடியாமல் இருந்தது. நமது சபையில் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்துக்கொண்டிருந்த போது புராபாய் தன் மகனை தூக்கிக் கொண்டு வந்தார். புராபாயின் மகனுக்காக ஜெபிக்கும் போது அவன் சத்தம்போட்டு என்னை விட்டுவிடுங்கள் என்றான். அவனுடைய வாய் பேசவும், பிசாசின் பிடியி–ருந்து விடுதலை பெறவும் தேவன் கிருபை செய்தார்.

**சகோ. கால்சிங் புரியா உதய்பூரா (மத்தியபிரதேசம்)**

பார்சிங்பாரியா என்ற சகோதரனுக்கு திருமணமான சிறிது நாட்களில் அசுத்த ஆவி பிடித்து விட்டது. இதனால் குடும்பத்தில் பயங்கர வியாதிகள் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். இவர் விக்கிர கோயில்களுக்குச் சென்று 10 ஆடுகளையும், 25 கோழிகளையும் ப–யிட்டும் அவருடைய குடும்பத்திலுள்ள வியாதிகள் தீரவில்லை. இறுதியாக இயேசு கிறிஸ்துவைக் கேள்விப்பட்டு நமது சபைக்கு வந்தார். நானும் சபையின் விசுவாசிகளும் இணைந்து அவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியி–ருந்தும், வியாதியி–ருந்தும் விடுவித்தார்.

**சகோ. ஜங்ளா R. டாமோர் காக்கன்வானி (மத்தியபிரதேசம்)**

காளுபாய் டாமோர் என்ற 45 வயது சகோதரன் கடந்த 5 வருடங்களாக ஆஸ்துமா மற்றும் காசநோயினால் கஷ்டப்பட்டு வந்தார். ரூ.15,000 வரை செலவழித்து மருத்துவம் செய்தும் சரியாகவில்லை. தலைவ–யும், இருமலும் எப்போதும் இருந்துகொண்டே இருந்தது. இந்த சகோதரன் இயேசுவின் வல்லமையைப்பற்றிக் கேள்விப்பட்டு சுகமளிக்கும் கூட்டத்திற்கு வந்தார். ஜெப வேளையில் தேவன் இவரை தம்முடைய வல்லமையால் சுகப்படுத்தினார்.

**சகோ. மால்சிங் B. கராசியா வாட்டா (மத்தியபிரதேசம்)**

கங்காபேன் என்ற சகோதரிக்கு தாங்கமுடியாத இடுப்புவ– இருந்தது. இதனால் மருத்துவமனைக்குச் சென்று அநேக மருந்துகள் வாங்கி சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. மிகவும் பெலவீனமானதால் மருத்துவமனையில் குளுக்கோஸ் ஏற்றினார்கள். இருப்பினும் எந்த பலனுமில்லை. இறுதியாக சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். நாங்கள் இந்த சகோதரிக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். தேவனுக்கே நன்றி.

**சகோ. காளியா பிஸ்போர் காச்லா (மத்தியபிரதேசம்)**

காச்லா கிராமத்தைச் சேர்ந்த மணிபேன் என்ற சகோதரிக்கு கடந்த 6 மாதமாக தொண்டையில் பயங்கர வ– இருந்தது. இதனால் தண்ணீர் குடிக்கவோ, சாப்பிடவோ முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். மருத்துவமனைக்குச் சென்று அதிக பணம் செலவழித்தும் எந்தப் பலனுமில்லை. இறுதியாக நம்முடைய சுகமளிக்கும் கூட்டத்திற்கு விசுவாசத்துடன் வந்தாள். ஜெப வேளையில் தேவன் தம்முடைய ஆணி பாய்ந்த கரத்தை வைத்து சுகப்படுத்தினார். தேவனுக்கே நன்றி.

# NúLôR¬ Nk§Wô úP®h AYoL°u T¦jR[ TôoûY

தேவகிருபையால் 24.09.08 புதன்கிழமை அன்று **சகோதரி. சந்திரா டேவிட்** (Nazareth Mat.Hig.Sec.School, Avadi) **சகோதரி. விஜி கிரேஸ்** (Hindi Dept H.O.D. Bain School, Chennai); **சகோதரி. சுந்தரி செல்வின்** (Retd Teacher, V.K.Puram) மூவரும் அதிகமான ஜெபத்திற்கு பின்பு ஆவியானவரின் வழிநடத்துத–ன்படி ஷாலோம் ஊழிய பணித்தளத்தை பார்வையிட தேவன் கிருபை தந்தார்.

24.09.08 அன்று காலை மத்தியபிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் காச்லா என்ற கிராமத்தில் கட்டப்பட்ட கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். கரடுமுரடான சரியான சாலை வசதியற்ற உள்ளடங்கிய பின்தங்கிய கிராமம். ஆனால் ஆலயம் நிரம்பத்தக்கதாக விசுவாசிகள் உற்சாகமாக கலந்துகொண்டார்கள். சகோ. சந்திரா டேவிட் அவர்கள் ஜெபித்து திறந்து வைத்தார்கள். சகோதரி. விஜி அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார்கள். சகோதரி. சுந்தரி அவர்கள் வாழ்த்து செய்தி கூறினார்கள். மாலையில் திரும்பி வரும்போது அந்தர்வே–யா பணித்தள ஆலயம், 25 மாணவர்களுள்ள விடுதியைப் பார்க்கவும், '**காளாகேத்**' கிராம ஆலய விசுவாசிகளைக் காணவும், குவா–, பத்ரா கிராம ஆலய மூப்பர்களை கண்டு பேசவும் தேவன் கிருபை தந்தார்.

25.09.08 அன்று காலை குஜராத் ஹிரோலா பணித்தளத்தில் ஆதிவாசி பிள்ளைகள் பராமரிப்பு திட்டத்தை (Karuna Bal Vikas) பார்வையிடவும், 260 பிள்ளைகள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பெலப்பட்டவர்களாக வளருவதைக் கண்டு தேவனைத் துதித்தார்கள். பின்பு ஆரம்ப நாட்களில் ஊழியங்கள் நடைபெற்ற இடங்களைக் கண்டு தேவனுக்கு நன்றி கூறினார்கள். பின்பாக குஜராத் **"காமடி"** கிராம ஆலயத்தை சகோதரி. விஜி அவர்கள் ஜெபித்து திறந்துவைத்தார்கள். சகோதரி. சந்திரா டேவிட் அவர்கள் செய்தி அளித்தார்கள். விசுவாசிகள் தேவனைத் துதித்து ஆராதித்தார்கள். அதன்பின்பு பெரிய மேளதாளங்களுடன் கிராமிய நடனமாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

அதன்பின்பு இராஜஸ்தான் மாநிலத்தில் பிஜல்பூர் மாணவர் விடுதி மற்றும் பள்ளியை காண தேவன் கிருபை தந்தார். சமார் 260 பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சிகளைக் காணவும் அவர்களுக்கு சென்னையி–ருந்து கொண்டு வந்திருந்த பேனா, பென்சில், சோப்பு, பவுடர், பிஸ்கட் இவைகள் வழங்கப்படவும் கர்த்தர் கிருபை செய்தார். மேற்கண்ட காச்லா கிராம ஆலயம் திருமதி. சந்திரா டேவிட் அவர்கள், மற்றும் காமடி கிராம ஆலயம் சகோதரி. விஜி கிரேஸ் அவர்கள் கொடுத்த நிதி உதவி மூலமாகக் கட்டப்பட்டவைகளாகும். இன்னும் ஷாலோம் ஊழியங்களுக்காக, பீல் மக்களுக்காக ஜெபிப்போம். அநேகரை அறிமுகப்படுத்துவோம். தாங்குவோம் என்று ஆத்துமபாரத்துடன் திரும்பிச் சென்றார்கள். தேவன்தாமே அவர்கள் மூன்று பேரின் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

## சென்னையிலிருந்து சகோதரி சந்திரா டேவிட், சகோதரி விஜி, சகோதரி சுந்தரி (V.K. புரம்) ஆகியோரின் பணித்தள வருகை




காச்லா, மத்தியபிரதேசம் கிராம ஆலய பிரதிஷ்டை




இராஜஸ்தான் பிஜல்பூர் ஷாலோம் மாணவர் விடுதி பிள்ளைகள் சந்திப்பு




காமடி, குஜராத் கிராம ஆலய பிரதிஷ்டை



மகிழ்ச்சியுடன் உற்சாகமான வரவேற்பு



குஜராத், ஹிரோலா கிராம மாணவர்கள் பராமரிப்புத் திட்டத்தை பார்வையிடல்

# பில் ஆதிவாசி வாலிபர்களுக்கான விசேஷித்த முகாம்கள்




கலந்து கொண்ட வாலிப ஆண்கள்



கலந்து கொண்ட வாலிப பெண்கள்



செய்தி கொடுத்து அபிஷேகத்தில் நடத்தும்





சகோதரி லலிதா தேவதாஸ் அவர்கள்



கண்ணீரோடு அர்ப்பணித்தல்



சாட்சி கொடுப்போர்




சிறப்பு பாடல்கள் மற்றும் நாடக வேளை




சிறப்பு செய்தி சகோ. ஜெபராஜ் அவர்கள்

# பீல் வாலிபர் முகாம்

பீல் ஆதிவாசி மக்களில் சுமார் 65% வா–பர்கள் காணப்படுகிறார்கள். தேவன் இந்த வா–பர்களைக் குறித்த பாரத்தை எங்களுக்குத் தந்தார். இவர்களுக்காக ஜெபித்த போது வா–ப ஆண்கள் மற்றும் வா–ப பெண்களுக்கென தனித்தனியாக முகாம்கள் நடத்தும்படி தேவன் கட்டளையிட்டார். அதற்காக ஜெபித்து..

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்ட் | – | 17 | குஜராத் வா–பர் முகாம் (ஆண்கள்) |
| ஆகஸ்ட் | – | 18 | குஜராத் வா–பர் முகாம் (பெண்கள்) |
| செப்டம்பர் | – | 6 | ம.பி. ஜாபுவா, ராணாபூர் பகுதி வா–பர் முகாம் (ஆண்கள்) |
| செப்டம்பர் | – | 7 | ம.பி. ஜாபுவா, ராணாபூர் பகுதி வா–பர் முகாம் (பெண்கள்) |
| செப்டம்பர் | – | 27 | ம.பி. காக்கன்வாணி பகுதி வா–பர் முகாம் (ஆண்கள்) |
| செப்டம்பர் | – | 28 | ம.பி. காக்கன்வாணி பகுதி வா–பர் முகாம் (பெண்கள்) |

என்று பிரித்து வா–ப முகாம்களை நடத்த தேவன் கிருபை செய்தார். இந்த முகாம்களில் சுமார் 1209 வா–பர்கள் பங்கு பெற்றார்கள். வந்தவர்களில் சுமார் 1500க்கும் மேற்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களின் வாழ்க்கை வழிகள் தாறுமாறாக இருந்ததை இந்த முகாம் மூலமாக தேவன் அவர்களுக்கு உணர்த்தினார். வேத வசனம் அவர்கள் வாழ்க்கைக்கு தீபமாக மாறியது. தங்கள் வா–ப நாட்களில் சிருஷ்டிகரை நினைத்து அவரையே சார்ந்து வாழ வேண்டும் என கற்றுக் கொண்டார்கள். தங்களுடைய வா–பத்தை யோசேப்பைப் போல பரிசுத்தத்திற்கென்று ஒப்புக் கொடுத்துள்ளார்கள். பொதுவாக இவர்கள் சபைக்கு ஒழுங்காக வராதவர்கள். இன்றைக்கு ஒழுங்காக சபைக்கு வருகிறது மாத்திரமல்ல ஊழியம் செய்யுவம் ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு சில சபைகளில் இவர்கள் ஆலய ஆராதனை நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். மேலும் தேவன் இவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்துள்ளார். அவர்களை பார்த்து சபைப் போதகர்களும், பெற்றோர்களும் தேவனை மகிமைப்படுத்தி கர்த்தருக்குள் சந்தோஷமடைந்தார்கள்.

இதேபோல் இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக இன்னும் 3600 வா–பர்களுக்காக முகாம் நடத்த தீர்மானித்துள்ளோம். இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## ஜெபக் குறிப்புகள்



- ✞ ஒரு கோடி பீல் இன மக்களும் இரட்சிக்கப்படவும், 2020—க்குள் 7000 கிராமங்களில் 7000 ஊழியர்களும், சபைகளும் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்....
- ✞ 430 சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்விற்காக ஜெபியுங்கள்....
- ✞ ஒவ்வொரு சபையிலும் குறைந்தது 7—12 மூப்பர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, ஒரு மனதாய் ஊழியருடன் இணைந்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபைகளை ஸ்திரப்படுத்தவும், ஜெபியுங்கள்.
- ✞ மூன்று மாநிலங்களிலும் சபைகள் ஸ்திரமாகவும், ஒழுங்காகவும் இருந்து திருமணம், இறப்பு பதிவுகள் மற்றும் கணக்கு வழக்குகளில் சிறப்பாக செயல்படவும் ஜெபியுங்கள்....
- ✞ இதுவரை கட்டி முடிக்கப்படாமல் தாமதமாகும் ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும், 2010—க்குள் புதிதாக 100 ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான அனுமதி கிடைக்கவும், உள்ளூர் சபைகளின் பங்கு கொடுக்கப்படவும் ஜெபியுங்கள்....
- ✞ 2010—க்குள் 300 புதிய சுதேச ஊழியர்கள் கிடைக்கப்பெறவும், 1 மாத பயிற்சி, அதைத் தொடர்ந்து தரப்படும் B.Th பயிற்சி இவைகளுக்காகவும் ஜெபியுங்கள்....
- ✞ பயிற்சி உபகரணங்கள், மூப்பர்கள் பயிற்சி, ஒ—, ஒளி உபகரணங்கள் தயாரித்துக் கொடுக்கவும் ஷாலோம் வேதாகமப்பள்ளி ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ ஹிரோலா, ஜெரி கிராமங்களில் நடைபெறும் Compassion Project—க்காகவும், புதிய திட்டங்கள் குஜராத்தில் ஒன்றும், மத்தியப்பிரதேசத்தில் ஒன்றும் கிடைக்கப்பெறும்படியாக ஜெபியுங்கள்.
- ✞ நவம்பர் 4 முதல் 7 வரை குஜராத், மேம்தாபாத்தில் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் மூலமாக நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாமிற்காகவும் ஊழியர்களின் பிரயாணங்களுக்காகவும் தங்கும் வசதிக்காவும் உணவு வசதிக்காகவும், தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

## NúLô. K.N. Wô_u AYoL° uT¦ jR[ YÚûL

தேவ கிருபையால் 04.10.2008 சனிக்கிழமை தாகோத் ஷாலோம் பயிற்சி கூடத்தில் நடைபெற்ற மத்தியப்பிரதேச ஊழியர்கள் கூடுகையில் சகோ. K.N. ராஜன் அவர்கள் செய்தியளித்து ஆவிக்குரிய வரங்களை அனல் மூட்ட அனைவரையும் புதிய அபிஷேகத்துள்ளாக வழி நடத்தினார்கள். பின்பாக குஜராத் வரம்கேடா கிராம ஆலயத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற ஆசீர்வாத விடுதலை கூட்டத்திலும் ஆலயம் நிரம்பி விசுவாசிகள் கூடியிருந்தார்கள். செய்தியளித்து ஜெபித்த வேளையில் அநேகர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். நோயி–ருந்தும், பிசாசின் கட்டுகளி–ருந்தும் விடுதலை பெற்று சுமார் 25 பேர் சாட்சியளித்தார்கள். சிறுபிள்ளைகள் உற்சாகமாய் பங்குபெற்றார்கள்.

05.10.2008 ஞாயிற்றுக்கிழமை அன்று குஜராத்தில் மன்கோசலா கிராம ஆலயம் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். சகோ. K.N. ராஜன் அவர்கள் ஜெபித்து திறந்து பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். ஆராதனை வேளையில் தேவ மகிமை இறங்கியது. செய்தியளித்து ஜெபித்தவேளையில் சுமார் 40 பேர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். அநேகர் விடுதலை பெற்றதை சாட்சி கொடுத்தார்கள். அதன்பின்பாக ஊழிய ஆரம்ப நாட்களில் குடியிருந்த பேய்பங்களா சென்று அழைக்கப்பட்ட வீட்டையும், பின்பாக 10 வருடங்கள் ஊழியம் செய்த இல்லத்தையும் பார்வையிட; சாட்சிகளையும் சொல்– தேவனை மகிமைப்படுத்தினோம்.

06.10.08 திங்கட்கிழமை அன்று காலையில் மத்தியபிரதேசம் விசல்பூர் கிராம ஆலயத்தில் நடந்த சிறப்பு கூட்டத்தில் சகோ. K.N. ராஜன் அவர்கள் செய்தி அளித்தார்கள். அநேகர் விடுதலையும், அபிஷேகமும் பெற்றார்கள். பின்பாக இராஜஸ்தான் ஊழியர்கள் கூட்டத்தில் பங்கு பெற்று செய்தி அளிக்க தேவன் கிருபை செய்தார். அநேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவர்களாய் அபிஷேகத்தில் நிரப்பப்பட்டார்கள்.

07.10.08 செவ்வாய்க்கிழமை அன்று இராஜஸ்தான் பான்ஸ்வாடா மாவட்டத்தில் கட்டப்பட்ட லாலாவாடா கிராம ஆலயத்தை பிரதிஷ்டைசெய்ய தேவன் கிருபை தந்தார். சகோ.K.N.ராஜன் அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். ஆலயம் நிரம்ப தேவ ஜனங்கள் ஆராதித்து தேவ ஆசீர்வாதத்தை தேவனுடைய வார்த்தை மூலமாக பெற்றுக்கொண்டார்கள். வரும் வழியில் பிஜல்பூர் கிராமத்தில் உள்ள “Shalom School மற்றும் Hostel”–ஐ பார்த்து பிள்ளைகளுக்காக ஜெபிக்க தேவன் கிருபை தந்தார்.

மேலும் 05.10.08 அன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ் ஊழியர் ஐக்கியத்தில் பங்குபெற்று செய்தியளித்தார்கள். ஷாலோம் ஊழியத்தையும், பீல் மக்களையும் அதிகமாக நேசிக்கும் சகோ. K.N.ராஜன் அவர்களுக்காக இயேசு அதிசயங்கள் செய்கிறார் ஊழியங்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்கள் ஊழிய சார்பில் 5 சுதேச ஊழியர்கள் தாங்கப்பட்டு வருகிறார்கள். மேலும் மன்கோசலா, லாலாவாடா கிராம ஆலயங்கள் ரூ.2,00,000/– செலவில் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மேலும் இன்னும் வளர்ந்து வரும் பணிக்காக தொடர்ந்து ஜெபித்து தாங்க முன்வந்துள்ளார்கள். தேவனுக்கு மகிமை மற்றும் சகோ. K.N.ராஜன் குடும்பத்திற்கும், ஊழியத்திற்கும் தேவ நாமத்தில் நன்றி கூறுகிறோம்.

**ஷாலோம் ஊழியங்களை குறித்து சகோ K.N.ராஜன் அவர்கள்....**



2008 அக்டோபர் 4 முதல் 7 வரை ஷாலோம் ஊழியத்தோடு இணைந்து குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஒரு கோடி பீல் ஆதிவாசி ஜனங்களை தரிசனமாக கொண்டு சகோ. V.தேவதாஸ் அவர்களும், அவர்களுடைய துணைவியார் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் தங்களை அர்ப்பணித்து கர்த்தருக்காக செய்து வருகிற பணிகளை நான் நேரடியாக பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

அவர்களுடைய ஊழியங்கள் மூலமாக மிருகமாக வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்கள் உண்மையான மனிதர்களாக மாற்றப்படுகிறார்கள். சபைகள் இல்லாத கிராமங்களில் நுற்றுக்கணக்கான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நுற்றுக்கணக்கான சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு வருகிறார்கள்.

ஆகையால் தரிசனத்தேடு செயல்படுகிற ஷாலோம் மிஷனெரி ஊழியத்திற்காக, குறிப்பாக சபைகள் கட்ட, மிஷனெரிகளை தாங்க, சுதேச ஊழியர்கள் உருவாக்க, எழுப்புதல் கூட்டங்கள் நடத்த தேவைகள் சந்திக்கப்பட வட இந்தியாவை குறித்த பாரமுள்ளவர்கள் ஜெபத்தினால் தாங்கவும், பணத்தினால் தாங்கவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். **கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.** (ரோமர் 15:21) என்ற வசனத்தின்படி கிறிஸ்துவை குறித்து அறியாத இடத்தில் சுவிசேஷம் அறிவிக்க உதவியாயிருங்கள்.

***கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!***

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **நிர்மலா (திவ்யா) D. வாகனியா** |
| தகப்பனார் பெயர் | : | திலிப்சிங் வாகனியா |
| தாயார் பெயர் | : | பாசுடிபேன் |
| பிறந்த நாள் | : | 1997 |
| படிக்கும் வகுப்பு | : | V |
| சொந்த ஊரின் பெயர் | : | ஜாபுவா |
| தாலூகா | : | ராணாபூர் |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியபிரதேசம் |
| படிக்கும் பள்ளி | : | - |
| தங்கி படிக்கும் விடுதி | : | Home |

## மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:-

மாணவி நிர்மலாவின் தந்தை திலிப்சிங் வாகனியா இயேசுவைப் பற்றி அறியாத குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய மனைவி (மாணவியின் தாயார்) பிசாசின் பிடியினால் 12 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருந்தார். அநேக மருத்துவம் பார்த்தும் பயனில்லை. ஏராளமான மந்திரகிரியைகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. தாமனி என்றகிராமத்தில் இயேசு கூட்டம் நடைபெறுவதாகவும், அந்த கூட்டத்தில் கலந்து கொண்டால் விடுதலை கிடைப்பதாகவும் கேள்விப்பட்டு அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இயேசுவின் நாமத்தில் ஊழியர் ஜெபித்தார். அந்த நாள் அற்புதமான விடுதலை கிடைத்தது. பின்பு முழு குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசித்தில் வளர்ந்தார்கள். திலிப்சிங் வாகனியா தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து சொந்த கிராமத்தில் வல்லமையாக ஊழியம் செய்து வருகிறார்.

## திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-

ஜெபிப்பதிலும், பாடல் பாடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. விளையாட்டுகளில் அதிக ஆர்வம் உண்டு. நன்றாக படிப்பாள். அமைதியான குணம் உடையவள் படித்து முடித்தபின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்றவாஞ்சை உண்டு.

## ஜெபிப்புகள்:-

படிப்பதற்கு விசேஷித்த ஞானத்தையும், கிருபையையும் தேவன் கொடுக்கவும், சரீர சுகத்திற்காகவும், பெற்றோர் செய்கிறஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் : Mrs. Selvi Sundar, Tuticorin.**

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 285 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

# சகோ. K.N. ராஜன், (இயேசு அதிசயங்களைச் செய்கிறார் ஊழியங்கள், மார்த்தாண்டம்) அவர்களின் பணித்தள வருகை




லாலாவாடா (இராஜஸ்தான்) கிராம ஆலய பிரதிஷ்டை




மண்கோசலா (குஜராத்) கிராம ஆலய பிரதிஷ்டை



பீல் ஆதிவாசி மாணவர்களுடன் சகோ. K.N.ராஜன் அவர்கள்




உற்சாகமான கலாச்சார வரவேற்பு



ஆலயத்தில் கூடி ஆராதிக்கும் விசுவாசிகள்





பீல் சுதேச ஊழியர்களுக்கான எழுப்புதல் கூட்டத்தில் தேவ வல்லமையும் அபிஷேகமும் இறங்கியது



வரம்கேடா ஆலய விடுதலை கூட்டம்



ஜெபித்துத் தாங்கப்படும்
சுதேச ஊழியர் ரமேஷ் மேடா குடும்பத்துடன்



1991 ல் ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட
பேய் பங்களாவின் முன்



சாலையோரத்தில் விற்கப்படும்
வில், அம்பு, அரிவாள்



வில், அம்புடன்
சகோ. K.N.ராஜன் அவர்கள்

## பணித்தளத்தில் தேவன் தந்த மிஷனெரி இல்ல ஆசீர்வாதம்

தேவனுடைய கிருபையால் முதல் 10 வருடங்கள் (1991 – 2000) வரை குஜராத்தில் ஜாலோடு தாலுகாவை மையமாகக் கொண்டு ஊழியம் செய்தோம். ஆவியானவரின் வழிநடத்துதலின் படி மாவட்ட தலைநகரான தாகோத்தை மையமாக வைத்து கடந்த 7 ஆண்டுகளாக 3 மாநிலங்களில் விரைவாக பணியாற்ற தேவன் கிருபை தந்துள்ளார். அனைத்து பயிற்சிகளை கொடுப்பதற்காக தேவன் C.N.I, I.P Mission வளாகங்களை வாடகை தந்தார். அதேபோல் 7 வருடங்களாக Christian Society ல் வாடகை வீட்டில் தங்கியிருந்தோம். தேவ தீர்மானத்தின்படி வீட்டுக்காரர் அந்த வீட்டை விற்க முன் வந்த போது நாம் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சுமார் ரூ.20 இலட்சங்கள் மதிப்புள்ள அந்த வீட்டை நம் ஊழியத்தில் பலனை கண்ட வீட்டார் ரூ. 14,25,000/–க்கு கொடுக்க முன் வந்தார்கள். மிகவும் பண நெருக்கடியான சூழ்நிலையில் முன்பணம் ரூ. 5 இலட்சங்கள் கொடுத்து ஏற்ற வேளையில் மீதி ரூ. 9,25,000/–ஐ கொடுக்க முடியாமற் போன சூழ்நிலையில் தவித்தோம். வீட்டு உரிமையாளர்கள் கெடு முடிந்து 2 மாதங்கள் ஆனபடியினால் அதிகமாக திட்டினார்கள். விசுவாசத்துடன் 1 வாரத்தில் பதிவு செய்ய பணம் தந்துவிடுவோம் என நம்பிக்கையற்ற சூழ்நிலையில் கூறிவிட்டோம்.

இரவில் கண்ணீருடன் தேவ பாதத்தில் ஜெபித்தேன். குஜராத்தில் இந்த சூழ்நிலையில் நாங்கள் எங்கு போவோம் என கண் கலங்கினேன். இரண்டு மூன்று இடங்களில் நம்பிக்கையுடன் பிரயாசப்பட்டேன். வீணாக போய்விட்டது. அடுத்த நாள் காலையில் டாக்டர். பால் தினகரன் (இயேசு அழைக்கிறார், சென்னை) தொலைபேசியில் அவர்களே பேசி பத்திரிக்கையில் எழுதின இந்த வீட்டுக் காரியத்தை அவர்களே விசாரித்து கண்ணீருடன் ஜெபித்தார்கள். மட்டுமல்லாமல் இரண்டு நாளில் இயேசு அழைக்கிறார் ஊழியங்கள் சார்பில் ரூ.10,00,000 (பத்து இலட்சங்கள்) அனுப்பி தேவ ஊழியக்காரனாகிய என் வார்த்தையை அந்த வீட்டு உரிமையாளர்கள் முன்பாக கனப்படுத்தி பணத்தை கொடுத்து அந்த வீட்டை ஷாலோம் ஊழிய மிஷனெரி இல்லமாக Sharing Love Mission பெயரில் பதிவு செய்ய தேவன் கிருபை செய்தார்.

இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்கு பல கோடி பணங்கள் தேவையாயிருக்கும் வேளையில் நாங்கள் பணம் கேட்டு எழுதவோ கேட்கவோ இல்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அன்பு தகப்பன் டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களிடம் பேசி அநேக ஊழியர்களின் தேவைகளை அறிவித்து கண்ணீரை துடைத்து பரவசப்படுத்தினார்களோ அதே போல மிகவும் ஆச்சரியமானபடி டாக்டர். பால் தினகரன் அவர்களை தேவன் ஆவியானவரால் நடத்தி எங்களை தாங்கினபடியானால் தேவனைத் துதிக்கிறோம்.



பீல் ஆதிவாசி மக்களையும் ஷாலோம் ஊழியங்களையும் விசேஷமாக எங்கள் மிஷனெரி குடும்பத்தையும் தங்கள் பிள்ளைகளாய் நேசித்த டாக்டர். டி.ஜி.எஸ். தினகரன் ஐயா –வைப் போல அதே சகோதர பாசம் கொண்டு ஜெபித்து கரிசனையும், அன்பையும் ஆதரவையும் கொடுத்துவருகிற டாக்டர் பால் தினகரன் அவர்கள் குடும்பத்திற்காக தேவனைத் துதிக்கிறோம்.

இயேசு அழைக்கிறார், காருண்யா பல்கலைக்கழகம், பெதஸ்தா ஊழியங்கள் சீஷா, ரெயின்போ ஊழியங்களை பல ஆயிரம் மடங்காக தேவன் ஆசீர்வதித்து பல கோடி ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதமாக உயர்த்துவாராக!

டாக்டர் பால் தினகரன் சகோதரி இவாஞ்சலின் பிள்ளைகள் சாம், ஷரோன், ஸ்வீட்டி மற்றும் அன்பு அம்மா ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

> நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். ஆதி. 12,2,3

Dr. பால் தினகரன் அவர்கள் குடும்பத்துடன்
சகோ. வே. தேவதாஸ் அவர்கள் குடும்பம்



வாங்கப்பட்டுள்ள தாகோத் மிஷனெரி இல்லம்

# ஒஸ்கா (மத்தியபிரதேசம்) கிராம ஆலயம்



மத்திய பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள மேக்நகர் தாலுகாவில் உள்ளடங்கிய ஒஸ்க்கா கிராமத்தில் போக்குவரத்து சாதனங்கள் இல்லாத மலைப்பாங்கான பகுதியாகும். இந்த கிராமத்து மக்களின் தொழில் சாரயம் காய்ச்சுவதும், திருடுவதும்தான். இறந்த ஆவிகளை வணங்குவதும் வியாதிப்பட்டால் பூஜை மற்றும் பூஜாரிகளின் உதவியை நாடி வருபவர்கள். இந்த சூழ்நிலைகளில் வாழ்ந்தவர்தான் நாட்டியா கர்வாள்.

நாட்டியா பாயின் மகள் ரோசினி அசுத்த ஆவியினால் தாக்கப்பட்டு 2 வருடம் வேதனைப்பட்டாள். பல ஆயிரம் ரூபாய் செலவு செய்தும் விடுதலைக் கிடைக்காமல் சஜேலி கிராமத்தில் நடந்த ஆலய ஆராதனையில் கலந்துக் கொண்டு சுதேச ஊழியர் ஜெபிக்கவே மகளுக்கு பூரண விடுதலைக் கிடைக்கவே குடும்பமாக இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து 2005ல் தனது வீட்டில் ஆராதனை ஆரம்பித்தார். 2006ல் நாட்டியாபாய் ஊழியர் பயிற்சியில் சேர்ந்து அபிஷேகமும் பெற்று ஊழியம் செய்யவே தற்போது 30 குடும்பங்கள் ஆண்டவரை ஆராதிக்கின்றனர். ஆலயம் கட்டுவதற்கு தன்னுடைய நிலத்தை காணிக்கையாக தந்தார். இந்த கிராமத்தில் 40X20அடியில் ரூ.70,000– மதிப்பில் அழகிய ஆலயம் கட்டப்பட்டது. இந்த கிராம ஆலயம் சகோ. சுதந்தா சிங் (சென்னை) அவர்களால் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் கன்னியாகுமரி மாவட்டம் புன்னையடி C.S.I. ஆலயத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

## சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. நவ்வல்சிங் பில்வால்



எனது பெயர் நவல்சிங் பில்வால். நான் குஜராத் மாநிலத்தில் உள்ள தாகோத் தாலுக்காவில் தெல்சர் என்ற கிராமத்தை சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசு கிறிஸ்துவை குறித்து அறியாதவர்களாக வாழ்ந்து வந்தோம். எங்கள் குடும்பத்தில் வேதனை மற்றும் ஒவ்வொருவராய் அடிக்கடி சுகவீனப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டோம். எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தும் அதனுடைய பலனை மருத்துவர்கள் மற்றும் மந்திரவாதிகளிடமும் செலவழித்து வந்தோம். இதனிமித்தம் மிகவும் தரித்திர நிலைமையில் வாழ்ந்து வந்தோம். எனது தம்பியும் அதிகமாக உழைத்து குடும்பத்தை முன்னேற்ற பிரயாசப்பட்டான். ஆனாலும் முடியவில்லை. கடைசியில் எங்களுக்கு இருந்த நிலத்தை எல்லாம் விற்று விட்டோம். மிகவும் வேதனையோடு இருந்த நேரத்தில் ஜாலோத் என்ற கிராமத்தை சேர்ந்த ரேமாபேன் என்ற சகோதரி எங்களை சந்தித்து இயேசு கிறிஸ்துவை பற்றியும், விலேர் கிராமத்தில் நடைபெறுகிற கூட்டத்தைப் பற்றியும் கூறினார்கள். அவர்களோடு சேர்ந்து நாங்களும் விலேர் கூட்டத்தில் பங்கு பெற்றோம்.

பின்பு சுதேச ஊழியரை எங்கள் வீட்டில் அழைத்தோம். அவர் வந்து எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார், அந்த நாளிலிருந்து எங்கள் வீட்டிலிருந்த பிரச்சனைகளும், தரித்திரமான நிலையில் இருந்து விடுதலை கிடைத்தது. நாங்களும் குடும்பமாக இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டோம். இயேசுவை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து எங்கள் குடும்பத்தில் சந்தோஷமும், சமாதானமும் நிலவி வருகிறது. எனக்கும் 3 குழந்தைகளை தேவன் தந்து ஆசீர்வதித்திருக்கிறார். சமாதானமற்று பிசாசின் பிடியில் தரித்திர நிலைமையில் இருக்கிற பீல் மக்கள் விடுதலை பெறும்படியாக என்னை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறேன். இதுவரை எங்கள் கிராமத்தில் 80 அதிகமான குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளன, ஒரு கிராம ஆலயத்தைக் கட்டி முடிக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார். மேலும் 3 கிராமங்களில் கிளை சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார். 5சபைகளையும், 5 ஊழியர்களையும் எழுப்பி குறைந்தது 1000 ஆத்துமாக்களை தேவனுக்குள் வழிநடத்துவது என்னுடைய தரிசனமும் ஆத்துமபாரமுமாகும். எனக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**இந்த சுதேச ஊழியரை தாங்குபவர்: Family Missionary Fellowship, Marthandam**

## சென்னையிலிருந்து சகோ. சுதந்திரசிங் Pr. சாலமோன், Pr. ஜெயக்குமார், சகோ. கிறிஸ்டோபர் ஆகியோரின் பணித்தள வருகை





ஓஸ்கா, மத்தியபிரதேசம் கிராம ஆலய பிரதிஷ்டை



செய்தி கொடுக்கும் Pr. ஜெயக்குமார்



உற்சாகமான கலாச்சார வரவேற்பு



பீல் மக்களுடன் நம் சகோதரர்கள்



இராஜஸ்தான் பாண்டி பகுதி மூப்பர்கள் கூடுகை



ஜெரி. குஜராத் பகுதி மூப்பர்கள் கூடுகை



மூத்த சீஷ ஊழியர்களுக்காக விசேஷித்த கூடுகை

## பணித்தளத்தை பார்வையிட்டவர்களின் இதயத் தொனி....

### கர்த்தர் செய்யும் காரியங்களை வந்து பாருங்கள்.

**சகோ.** A. **சுதந்திரசிங்,** சென்னை

ஒரு மனிதன் கீழ்ப்படியும் போது இத்தலைமுறையிலும் தேவன் விவரிக்க முடியாத அற்புதங்கள், அடையாளங்கள் மூலம் தம் சபையை பெருகப்பண்ணுகிறார் என்பதற்கு ஷாலோம் மிஷன் ஓர் நல்ல சாட்சி.

நாங்கள் Pr. சாலமோன், Pr. ஜெயக்குமார், சகோ. கிறிஸ்டோபர் ஆகியோர் குழுவாக சென்னையி–ருந்து வட இந்திய ஷாலோம் மிஷன் பணித்தள மையமான தாகோத்துக்கு சென்று 4 நாட்கள் தங்கியிருந்து பல மிஷன் பணித்தளங்களைப் பார்வையிட்டு சவால் பெற தேவன் கிருபை செய்தார்.

தேவகிருபையால் ஆகஸ்ட் 12–ம் தேதி இரவு தாகோத் பணித்தளம் வந்தடைந்தோம். 13–ம் தேதி துதியா குஜராத் ஜெரி கிராம ஆலயத்தில் உள்ள மூப்பர்களை சந்திக்கவும் விசுவாசிகள் கூட்டத்தில் உற்சாகப்படுத்தி பலப்படுத்த தேவன் கிருபை தந்தார். 120 ஆதிவாசி பிள்ளைகளுக்காக நடைபெறும்

ஆதிவாசி சிறுவர்கள் மேம்பாட்டு திட்டங்களைக் காண தேவன் கிருபை செய்தார். மூப்பர்கள், விசுவாசிகளுடைய சாட்சிகள் எங்களை பரவசப்படுத்தியது. அதைத் தொடர்ந்து விசல்பூர் ராம்பூரா கிராம சபைகளை பார்த்தோம். விசல்பூர் கிராமம் எந்தவித வசதியுமற்ற மிகவும் உள்ளடங்கிய பின்தங்கிய கிராமமாக இருப்பதைக் கண்டு மிகவும் வியப்புற்றோம். ஆனால் அந்த கிராம சபையில் ஆலயம் முழுவதிலும் விசுவாசிகள் வந்திருந்ததை பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மின்சாரம் மற்றும் எந்தவித வசதியுமில்லாத இந்த கிராம விசுவாசிகளுடன் இரவில் தங்கியிருக்க தேவன் கிருபை பாராட்டினார். காலையில் சில மைல் தூரங்கள் நடந்தே சென்று குஜராத்தில் உள்ள சாலப்பாடா கிராம ஆலய விசுவாசிகளையும், மூப்பர்களையும் சந்தித்தோம்.

14–ம் தேதி இராஜஸ்தானில் உள்ள பிஜல்பூர் கிராமத்தில் உள்ள நம் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதியில் பயிலும் 260 மாணவர்களைக் குறிப்பாக சுதேச ஊழியர்களின் பிள்ளைகளைக் கண்டு தேவனை துதித்தோம். இந்த பள்ளி விடுதியை சிறப்பாக நடத்தி வரும் சகோ. நாத்து டின்டோருக்காக தேவனுக்கு நன்றி கூறுகிறோம். எந்தவித வசதியுமில்லாத இந்த பிஜல்பூர் கிராமத்தில் பள்ளி, விடுதி, கட்டிடங்கள் உடனடியாகக் கட்டப்பட வேண்டும். மேலும் கட்டில், மெத்தை மற்றும் உபகரணங்கள் தேவை.

மாலையில் டாண்டி சபை எழுப்புதல் கூட்டத்தை ஆவியானவரின் பலத்த

கிரியை கண்டோம். அவர்கள் கலாச்சார வரவேற்பு மறக்க முடியாதது. வழியில் கோய்க்கா கிராமத்தில் உள்ள அனாதை மாணவர்கள் விடுதியைப் பார்வையிட்டோம்.

15–ம் தேதி மத்தியபிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் ஒஸ்கா கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்தோம். விசுவாசிகளின் சாட்சிகள் ஆராதனையைக் கண்டு பிரமித்தோம். மேலும் சொக்குவாடா பகுதியில் உள்ள சபைகள் இணைந்து நடத்திய மூப்பர்கள் கூடுகையிலும் பங்கு பெற்றோம். மூன்று மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் உள்ளங்கை அளவு மேகத்தை கண்டோம். விரைவில் பெருத்த மழையில் எழுப்புதல் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த 17 ஆண்டுகளில் பீல் இன மக்கள் மத்தியில் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்களை தேவனண்டையில் சேர்க்கவும், 200 கிராம ஆலயங்களைக் கட்டவும், 600 ஆராதனை குழுக்களை உருவாக்கவும் சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இவர்கள் எழுப்பியுள்ள 450 சுதேச ஊழியர்களில் பலர் மிகச் சாதாரண படிப்பறிவில்லாதவர்கள். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் இவர்களை அசாதாரணமாக பயன்படுத்தி வருவதைக் கண்டு தேவனைத் துதித்தோம். தினந்தோறும் அற்புதங்கள், தினந்தோறும் திருமுழுக்கு, ஆதி அப்போஸ்தலர் காலத்தில் சபை வளர்ந்து பெருகினது போல நம் தலைமுறையிலும் நம் தேவன் மாறாத கிரியை செய்கிறார்.

குஜராத், இராஜஸ்தான், மற்றும் மத்தியபிரதேசத்தில் பணியாற்றும் இவ்வியக்க ஸ்தாபகரின் அர்ப்பணிப்பும், தரிசனமும், பாரமும் குறிப்பிடத்தக்கது. தேவனுக்காக குறித்திருக்கும் இலக்கு நிறைவேற மிகக் கடினமாக உழைக்கிறார்கள். இவர்களுடைய ஊழியத்தின் முன்னேற்றப்பணிகளைத் தன்னார்வமாக செய்ய தமிழகத்தில் ஏராளமானோர் தேவை. ஷாலோம் ஜெபக்குழுக்கள் 1000 எழுப்புவோம். ஷாலோம் தன்னார்வலர்கள் 3000 பேரை எழுப்புவோம். வாரத்திற்கு 4 முதல் 8 மணி நேரம் இவ்வூழியத்துக்காக உழைக்க உங்களுக்கு விருப்பமா? சிறப்பு ஆலோசனைகளையும் பயிற்சியும் அளிக்க ஆயத்தமாகவுள்ளோம். தொடர்பு கொள்ளுங்கள்.

**Bro. Suthanthara Singh**
Gosend Enterprises,
1470, Gardem Aveneve, Mugapair, Chennai - 37.
Ph : 94442-41111

ஜெபிப்போம்! செயல்படுவோம்! இத்தலைமுறையில் இந்தியா இரட்சகரை அறியட்டும்.

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி-ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

**17.08.2008** அன்று பாளையங்கோட்டையில் உள்ள NGO காலனி CSI ஆலயத்தில் இராஜஸ்தானில் ஊழியம் செய்யும் 3 பீல் சுதேச ஊழியர்களின் பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடைபெற்றது.

| ஊழியர் பெயர் | | தாங்குவோர் குடும்பம் |
|---|---|---|
| 1. சகோ. மக்கன்லால் சர்போட்டா | – | சகோ. ஐசக் ஜெபசிங் |
| 2. சகோ. மான்சிங் பாரியா | – | சகோ. ஜோசப் தங்கசாமி |
| 3. சகோ. கல்லா டோடியார் | – | பேராசிரியர்.C.S.கிறிஸ்டோபர் |

நம்முடைய ஊழியத்தில் Board Member ஆக இருக்கும் **பேராசிரியர்.C.S.கிறிஸ்டோபர்** அவர்கள் மிகவும் பிரயாசப்பட்டு நம்முடைய ஊழியத்தில் அதிக பாரம் கொண்டு ஜெபித்து தாங்கி வருகிறார்கள். அவர்கள் முயற்சியினால் இந்த மிஷனெரி பிரதிஷ்டை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சபை குருவானவர் **Rev. Dr. ஸ்டீபன் T. டேனியல்** அவர்களுக்கும், சபை கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்காகவும் தேவனை ஸ்தோத்தரித்து நன்றி கூறுகிறோம்.

**12.10.2008** அன்று தூத்துக்குடி, டூவிபுரம், C.S.I தூய யாக்கோபு ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் மத்திய பிரதேசத்தை சார்ந்த **சகோ. மங்கள்சிங் முனியா** அவர்களை ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைக்கு மதிப்பிற்குரிய **கனம் பேராயர் J.A.D. ஜெபச்சந்திரன்** அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஆராதனையை **Rev.Dr. ஜேசன் செல்வகுமார்** அவர்கள் நடத்திக் கொடுத்தார்கள். சுதேச ஊழியரை ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலமாக தாங்கி வரும் **சகோ. பால் ஆசீர்** (Advocate) அவர்கள் குடும்பத்திற்காக தேவனை துதித்து நன்றி கூறுகிறோம். கர்த்தர் தாமே டூவிபுரம் தூய யாக்கோபு ஆலய ஆண்கள் ஐக்கிய சங்கத்தை ஆசீர்வதித்து இன்னும் பல மிஷனெரிகளை தாங்க உதவி செய்வாராக.

மேலும் டூவிபுரம் தூய யாக்கோபு ஆலயத்தில் மாலை 3 மணிக்கு ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலமாக நடத்தப்பட்ட மிஷனெரி தாங்குவோர் குடும்ப முகாமில் **சகோ. தேவதாஸ்** அவர்கள் சிறப்புச் செய்தியும், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்தியும் கொடுத்தார்கள். இந்த கூட்டம் **Rev.Dr. ஜேசன் செல்வகுமார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சபை மக்கள் அநேகர் பங்குபெற்று ஆத்துமபாரத்தையும், தரிசனத்தையும் பெற்று சென்றார்கள்.

## 17.08.2008 அன்று பாளையங்கோட்டை N.G.O. காலனி CSI ஆலயத்தின் சார்பில் நடைபெற்ற 3 மிஷனெரிகள் பிரதிஷ்டை ஆராதனை





## 12.10.2008 அன்று C.S.I. தூய யாக்கோபு ஆலய ஆண்கள் ஐக்கிய சங்கம் சார்பாக நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை மற்றும் தாங்குவோர் குடும்ப கூடுகை



ஆண்கள் ஐக்கிய சங்கத்துடன்



பேராயர் J.A.D. ஜெபச்சந்திரன் அவர்கள்
மற்றும் சபை குருவானவர்
Rev. ஜேசன் செல்வக்குமார் அவர்களுடன்



ஊழியருக்காக பேராயரின் ஜெபம்



கூடி வந்திருந்த சபை மக்கள்





மிஷனெரி தாங்குவோர் குடும்ப முகாமில் சகோ. ஜெயதாஸ் மற்றும் சகோதரி வசந்தா ஜெயதாஸ் அவர்களின் செய்தி வேளை

## சகோ. சத்தியதேவ் (மார்த்தாண்டம்) அவர்களின் பணித்தள வருகை

பீல் ஆதிவாசி மூப்பர்களுடன் நம் சகோதரர்கள்

பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு ஆலோசனையும், அன்பளிப்பும்

## விளைவின் பலன் அர்ப்பணிப்பு ஆராதனை

விளைவின் முதற்பலனை அர்ப்பணிக்கும் ஜாய்னி சபையார்

## புதிய ஊழியர்கள் பயிற்சி



புதிய ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ்



பயிற்சி பெற்ற புதிய 28 சுதேச ஊழியர்கள் மற்றும் பயிற்சி கொடுத்தவர்கள்.

## சகோ. சத்தியதேவ் அவர்களின் பணித்தள பார்வை

மார்த்தாண்டத்தைச் சார்ந்த சகோ. சத்தியதேவ் மற்றும் அவர்களுடைய சகோதரர் சகோ. சத்தியகுமார் அவர்களும் பணித்தளத்தை நேரடியாகப் பார்க்க வந்தார்கள். கடந்த செப்டம்பர் மாதம் 9–ம் தேதி முதல் 13–ம் தேதி வரை பணித்தளத்தில் குஜராத் மாநிலத்திலுள்ள ஜெரி மற்றும் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள விசல்பூர் கிராமங்களில் உள்ள சபைகளையும், சபை மூப்பர்களையும், விசுவாசிகளையும், ஊழியர்களையும் சந்தித்து அவர்களுக்கு நடத்தப்பட்ட கூட்டங்களில் பங்கு பெற தேவன் கிருபை செய்தார். குறிப்பாக இராஜஸ்தான் பிஜல்பூர் கிராமத்தில் உள்ள நம்முடைய ஆதிவாசி சிறுபிள்ளைகளையும் குஜராத் உறிரோலா மற்றும் ஜெசவாடா கிராமத்தில் உள்ள ஆதிவாசி பிள்ளைகளையும் சந்தித்து அவர்களுக்காக ஆலோசனைகளையும் அன்பளிப்புகளையும் கொடுத்தார்கள். பணித்தளத்திற்கு வந்தபோது 100 வேதபுத்தகங்களும் ஆதிவாசி சிறுபிள்ளைகளுக்கு ரூ.7000 மதிப்பில் வெகுமதிகளும் கொடுத்தார்கள். அவர்கள் குடும்பத்தின் சார்பில் ஒரு ஆலயம் கட்ட தீர்மானம் பண்ணி குஜராத்தில் ரிசும்புரா என்ற கிராமத்தைப் பார்வையிட்டு அங்கு ஆலயம் கட்டுவதற்காக அடித்தளம் போடப்பட்டது. பணித்தளத்தைப் பார்வையிட்ட சகோதரர்கள் மிஷனெரி தரிசனத்தையும், ஆத்துமபாரத்தையும் பெற்றுக்கொண்டு சென்றார்கள். மேலும் இன்னும் அதிகமாக ஊழியங்களைத் தாங்கவும் அநேக ஆதரவாளர்களை அறிமுகப்படுத்தவும் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்கி வருகிற அன்பு சகோதரர்களை தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக.

கடந்த செப்டம்பர் மாதம் 28 புதிய பீல் சுதேச ஊழியர்கள் 28 புதிய கிராமங்களி–ருந்து தெரிந்தெடுக்கப்பட்டு ஷாலோம் ஊழியத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள். செப்டம்பர் மாதத்தில் இவர்களுக்கான ஒரு மாத சிறப்பு ஊழியர் பயிற்சி தாகோதிலுள்ள, நமது "ஷாலோம் பயிற்சி கூடத்தில்" நடைபெற்றது. மேலும் நவம்பர் மாதத்தில் 40 புதிய ஊழியர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கும் பயிற்சி கொடுக்க உள்ளோம். தேவன் இவர்களை வல்லமையாகப் பயன்படுத்த ஜெபியுங்கள். இந்த 68 சுதேச ஊழியர்களை குடும்பமாக, குழுவாக, சபையாக ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள். ஒரு ஊழியருக்கு **(மாதம் ரூ. 1500/–)** இவர்களைத் தாங்கும்படி ஆவியானவர் ஏவினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி | | |

- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

# ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ ரூ.50,000/-கொடுத்து தேவையுள்ள இடத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்கு முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ❖ ஊழியத்திற்கு செல்ல ரூ.2,000/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** 48 சுதேச ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது. வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

# ஜே.டி. ஜெனிக்கே



திருநெல்வே– மாவட்டத்தில் கிறிஸ்தவ சபை கனம் சுவார்ட்ஸ் அவர்களால் நாட்டப்பட்டது என்றும், கனம் ஜெனிக்கே அவர்கள் அதற்கு நீர் பாய்ச்சினார் எனவும் கனம் டபிள்யூ. டேயிலர் எழுதியுள்ளார். இவ்விருவருடைய வாழ்க்கை வராறுகளையும், அவர்கள் ஆற்றிய கிறிஸ்தவப் பணியையும் நாம் அறியும்போது, இந்த உண்மை நமக்கு ஓரளவு புலனாகின்றது. 1750ஆம் ஆண்டு நம் நாட்டிற்கு வந்த கனம் சுவார்ட்ஸ் முத–ல் தரங்கம்பாடியிலும் பின் தஞ்சாவூரிலும் வாழ்ந்து, கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுவதற்கான பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். 1778ஆம் ஆண்டில் ஒருமுறை பாளையங்கோட்டையி–ருந்த ஐரோப்பியர் ஒருவர், தம்முடையதிருமணத்தை நடத்துவதற்காகவும், அங்கிருந்த ஐரோப்பிய குழந்தைகளில் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காகவும் பாளையங்கேட்டைக்கு வரும்படி கனம் சுவார்ட்ஸ் போதகரை அழைத்தார். அவ்வழைப்பிற்கிணங்கி கனம் சுவார்ட்ஸ் அவர்கள் பாளையங்கோட்டைக்கு வந்தார்கள். அந்தத் திருமணத்தை நடத்தி குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு, அங்கிருந்த ரோமன் சபை மக்களுடனும், இந்துக்களுடனும் உரையாடி, கிறிஸ்தவ நற்செய்தியை எடுத்துரைத்தார். பின்னர் தஞ்சைக்குத் திரும்பியதும் திருநெல்வே– மாவட்டத்தில் சுவிசேஷப் பணி செய்தால் பயனளிக்குமென்றும், கிறிஸ்துவின் வசனம் விதைப்பதற்குத் தகுதியான இடம் அது என்றும், அப்பணி பயன் தரும் என்றும் தம்முடைய உடன் ஊழியரொருவருக்கு எழுதினார். அதற்கானவைகளைச் செய்யவும் முற்பட்டார்.

1785ஆம் ஆண்டு இரண்டாம் முறையாகக் கனம் சுவார்ட்ஸ் பாளையங்கோட்டைக்கு வந்தார். அங்கு அப்பொழுது குறோரிந்தா அம்மையார் தஞ்சாவூரி–ருந்து குடிவந்து, தம்மையண்டி வாழ்ந்த மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து, ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டியிருந்தார்கள். அவ்வாலயத்தை அதே ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24ஆம் தேதி சுவார்ட்ஸ் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின் ஐந்து ஆண்டுகள் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி திருநெல்வே– மாவட்டத்திற்கு ஒருவரும் வரவில்லை. ஆனால் அம்மாவட்டத்திலுள்ள மக்கள் நடுவில் கிறிஸ்தவ நற்செய்தியைப் பரவச் செய்ய வேண்டுமென்று கொண்டிருந்த எண்ணத்தை கனம் சுவார்ட்ஸ் விடவில்லை. 1790ஆம் ஆண்டு சுவிசேஷ ஊழியத்தைச் செய்வதற்கென சத்தியநாதன் உபதேசியாரை அங்கு அனுப்பினார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் திருநெல்வே–யில் ஒரு மிஷனெரி நிரந்தரமாகத்

தங்கி உழைப்பது நலம் என்று கருதி மிஷனெரி ஜெனிக்கேயை அவர் பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். திருநெல்வே– மாவட்டத்திலே சுவிஷேசம் தீவிரமாக அறிவிக்கப்படவும், அநேக இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவவும் காரணமாயிருந்த பக்தன் ஜெனிக்கேயாவார். இவர் மிஷனெரியாக வந்த நாள் முதல் இந்நதிய மக்களின் பேரில் நல்லெண்ணமும், அன்பும் கொண்டவராக விளங்கினார் என்று அவர் எழுதி வந்த தினசரி குறிப்புகள் மூலம் அறியமுடிந்தது. தம் உடன் ஊழியர்களிடமும், தம் முயற்சியால் கிறிஸ்தவர்களாக ஆனவர் யாவர்பாலும் அவர் காட்டிய அன்பு அவைகளின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவர் 1759ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் தேதி ஜெர்மனி நாட்டின் தலைநகரான பெர்–னில் பிறந்தார். ஊரல் கல்லூரியில் இறையியல் கற்று 1787ஆம் ஆண்டு வெர்நிகர்தே என்னுமிடத்தில் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இளம் பருவத்தி–ருந்தே கிறிஸ்தவச் சமயம் பரவச் செய்யும் திருத்தொண்டராகத் திகழ வேண்டுமென்பது அவருடைய வாஞ்சை. எனவே, தென்னிந்தியாவில் மிஷனெரியாக ஊழியம் செய்வதற்கு அவருக்கு அழைப்பு வந்தபொழுது, அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். 1788ஆம் ஆண்டு அவர் தம் நாட்டைவிட்டுப் புறப்பட்டு, இங்கிலாந்திற்குச் சென்று கிழக்கிந்திய கப்பலொன்றிலேறி ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி தரங்கம்பாடி சேர்ந்தார். அங்கே டேனிஷ் மிஷனெரிகளுடன் சுமார் ஒரு மாதம் செலவிட்ட பின்னர் தஞ்சாவூருக்குச் சென்றார். அங்கு கனம் சுவார்ட்ஸ் போதகரின் உதவியால் ஆங்கிலத்தையும், தமிழ் மொழியையும் கற்றார். இம் மொழிகளில் திருமறையையும், அதன் விளக்க உரைகளையும் படித்து 1790ஆம் வருடம் தமிழில் பிழையின்றி நன்முறையில் அருளுரை ஆற்றினார்.

**சத்தியநாதனும், ஜெனிக்கேயும்**

சத்தியநாதன் உத்தமபாளயத்தில் வாழ்ந்து வந்த ஒரு விவசாயியின் மகன். இவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர். பெற்றோரால் அவருக்கு இடப்பட்ட பெயர் கற்பகம் என்பதாகும். இளைஞனாக இருக்கும்பொழுது ஒரு நாள் திருவிழாவிற்கென்று திருச்சிராப்பள்ளிக்கச் சென்றார். அங்க தெருப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ நற்செய்தி எடுத்துரைக்கக் கேட்டார். அதைக்குறித்து மேலும் அறிய விரும்வி தஞ்சாவூருக்குச் சென்றார். அங்கு கனம் சுவார்ட்ஸ் போதகரைச் சந்தித்து, அவரிடமிருந்து கிறிஸ்துவின் மீட்பின் வல்லமையையும், அவருடைய அன்பையும் மேலும் அறிந்தார். பின் சில காலம் மிஷனெரி ஜே.சி. கோலாப் போதகரால் போதிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று சத்தியநாதன் என்ற பெயருடன் திருச்சபையில் சேர்ந்தார்.

அவருடைய வேத அறிவையும், பக்தியையும், சுவிசேஷ வாஞ்சையையும் கவனித்த கனம் சுவார்ட்ஸ் முத–ல் தஞ்சாவூரி–ருந்து ஏழு மைல் தூரத்தி–ருந்த வல்லம் என்ற

கிராமத்திற்கும், பின்னர் தரங்கம்பாடிக்கும் உபதேசியாராகப் பணியாற்றும்படிக்கு அவரை அனுப்பினார். 1785 ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில் சுவிசேஷ பணி செய்வதற்கென்று ஊழியரை அனுப்பும்படி குளோரிந்தா அம்மையார் கனம் சுவார்ட்ஸ் போதகரைக் கேட்டுக்கொண்டபொழுது அங்கு வெற்றிகரமாகக் கிறிஸ்தவப் பணியாற்றக்கூடியவர் சத்தியநாதனென்று அவர் கருதி அவரைப் பாளையங்கோட்டைக்கு அனுப்பினார்.


திருநெல்வே– மாவட்டத்தில் கிறிஸ்தவ பணியாற்ற மேனாட்டு மிஷனெரி எவரும் அக்காலகட்டத்தில் இல்லை. கிறிஸ்தவ நற்செய்தியை அங்கு அறிவிக்க ஜெனிக்கேயை அனுப்புவதென்று கனம் சுவார்ட்ஸ் முடிவு செய்தார். தாம் முத–ல் தீர்மானித்திருந்தபடி சத்தியநாதனுடன் அவரை அனுப்ப இயலாமற்போயிற்று அப்பொழுது தென் இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் நிலைவரப்படவில்லை. ஹைதர் அ– உயிரோடிக்கும் நாட்கள் வரைக்கும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்செய்து வந்ததான். 1782ஆம் ஆண்டு அவன் இறந்த பின் அவனுடைய மகனான திப்பு சுல்தான் அவர்களின் பேரில் பகை கொண்டு, அவர்கள் நிலைகொள்ளாதபடி அவர்களுக்கு இடையூறுகள் பல செய்து வந்தான். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஜமீன்தார்களும், பொ–தார்களென்பவர்களும் ஆங்கிலேயரை எதிர்த்து கலகம் செய்து வந்த காலம் அது. தென் நாட்டி–ருந்து அமைதி குறைவின் காரணத்தால் பாளையங்கோட்டைக்கு செல்லும்படியாகத் திட்டமிட்டிருந்த ஜெனிக்கேயின் பயணம் காலதாமதமாயிற்று. எப்பொழுது அங்கு சென்று தம்முடைய சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பிக்கலாமென்று பேராவலுடன் காத்திருந்த ஜெனிக்கேயிக்கு இது மனவருத்தத்தைக் கொடுத்தது. இதைக் குறித்து 1780ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர் எழுதியதாவது "கிறிஸ்தவ இராஜ்யம் பரவுதலுக்காக உழைக்க பாளையங்கோட்டையில் பல வழிகளிருக்கின்றனவென்று தெரிகின்றது. இவை நான் அங்கு செய்ய எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஊழியத்தில் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிக்கின்றது. யுத்தங்களில்லாம–ருந்தால் இதற்குள் நான் மகிழ்வுடன் அங்கு சென்றிருப்பேன்" என்பதே.

சத்தியநாதன் கிறிஸ்தவப் பணியாற்றின எல்லா இடங்களிலும் தம்முடைய நன்நடக்கையினாலும், சுவிசேஷ வாஞ்சையினாலும் மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார். அவருடைய வேத அறிவையும், பணிகளையும் மிஷனெரிகள் போற்றினார்கள். வல்லத்திலும், தரங்கம்பாடியிலும் அவர் செய்த வேலையையும், பாளையங்கோட்டையில் அவர் ஆரம்பித்து நடத்தி வந்த ஊழியத்தையும் கனம் சுவார்ட்ஸ் பாராட்டி, தன்னுடன் உழைத்து வந்த மிஷனெரிகளுடன் கலந்து ஆலோசித்து அவரை வரவழைத்து, 1790 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி குருவாக அபிஷேகம் செய்வித்தார். சுமார் ஒரு மாதத்திற்குப்பின் 1791 ஆம் வருடம் ஜனவரி மாதம் சத்தியநாதன் பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். அவருக்குத் துணையாக கிறிஸ்தியான் என்ற பெயருடைய உபதேசியாரும் பாளையங்கோட்டைக்குச் சென்றார்.

நன்றி : ஒளிவீசும் சுடர்கள்

# நினைவுபடுத்துகிறோம்...

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



தேவ கிருபையினால் பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த ஆண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் வெகுமதிகளுக்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை 2008 நவம்பர் மாதத்திலோ அல்லது டிசம்பர் முதல் வாரத்திலோ எங்கள் பிரதிநிதிகள் மூலமாக அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதைத் திறக்க சாவி (Key) வேண்டுமானால் 09345675468 (சகோ. சாம் குணசீலன்) இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

## எங்களுடன் தொடர்பு கொள்ள


<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in
Website : www.shalommission.in

## நாட்டு நடப்புச் செய்திகள்....

சந்திராயன் –1 செயற்கை கோள் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தி–ருந்து விண்வெளிக்கு விரைவில் ஏவப்படவுள்ளது. இந்த செயற்கை கோள் நிலவி–ருந்து 100 கி.மீ தொலைவில் நிலவை சுற்றி வந்து இரண்டு ஆண்டுகள் பல்வேறு ஆய்வுகள் நடத்தவுள்ளது. இந்த செயற்கை கோளில் உள்ள "மூன் இம்பாக்ட் புரோப்" என்ற கருவி நிலவில் மோதி இறங்கவுள்ளது. இந்தக் கருவியில் இந்திய மூவர்ணக் கொடி பொறிக்கப்பட்டுள்ளது. 19.10.2008

---

காடுகளில் வசிக்கும் யானைகள் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு அறுவடைக்கு தயாராக நிற்கும் பயிர்களை அழித்து நாசம் செய்வது கென்யா நாட்டில் அதிகமாக நடைபெறுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக கென்யா நாட்டில் காடுகளிலுள்ள யானைகளுக்கு நவீன சிம் கார்டுகள் பொருத்தப்படுகின்றன. இந்த சிம் கார்டில் கூருல் எர்த் சாப்ட்வேர் பொருத்தப்பட்டுள்ளது. இந்த சாப்ட்வேர் யானைகள் தங்களுக்குரிய இடங்களை விட்டு விலகிச் செல்லும் போது வன ரேஞ்சரின் போனுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பும் இது யானைகள் பயிர்களை அழிப்பதற்கு முன்பாகவே தடுத்து விரட்டுவதற்கு உதவுகின்றது. 20.10.2008


---

இந்தியாவில் 7.3 லட்சம் பிச்சைக்காரர்கள் உள்ளனர். இவர்களின் மொத்த ஆண்டு வருமானம் 180 கோடி ரூபாய். ஆனால் இவர்கள் பிச்சை எடுக்கும் ரூபாயில் 20 சதவீதத்தை மட்டுமே சாப்பிடுவதற்கும் மற்றதை தவறான பழக்கங்களுக்கும் பயன்படுத்துகின்றனர் என்று மனித நல கவுன்சி–ன் இயக்குனர் முகமது ரபியுதீன் ஐதராபாத் பிச்சைக்காரர்கள் என்ற தனது நூ–ல் கூறியுள்ளார். 17.10.2008

– நன்றி தினமலர்

---

# சந்தாவைப் பற்றி



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–      ஆயுள் சந்தா : ரூ.600/–**

# ஷாலோம் மிஷன் ஞாயிறு 2008 காணிக்கை படைப்பு


குஜராத் கங்கேலா திருச்சபையார்


குஜராத் கங்கேலா திருச்சபையார்


மத்தியபிரதேசம் நாங்கள்வட் திருச்சபையார்


மத்தியபிரதேசம் விசல்பூர் திருச்சபையார்


இராஜஸ்தான் டாண்டி சபையார்


இராஜஸ்தான் கோட்க்கா சபையார்

இந்த ஆண்டு மிஷன் ஞாயிறு ஆராதனையில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் தேவ பணிக்காக பீல் ஆதிவாசி திருச்சபையார் தியாகத்துடன் தங்கள் காணிக்கைகளை கவர்களில் வைத்து உற்சாகத்துடன் இதுவரை ரூ.8 இலட்சத்திற்கும் அதிகமாக படைத்துள்ளார்கள். மக்கதோனியா சபையாரை போல் தேவனுக்காக கொடுக்கும் நம் பீல் சபை விசுவாசிகளுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month




Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss